QB365 Question Bank Software Study Material

குடிமையியல் - நீதித்துறை முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

8ம் வகுப்பு

சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 55

2 மதிப்பெண் வினாக்கள்

15 x 2 = 30

1) நீதித்துறை அமைப்பு நமக்கு ஏன் தேவைப்படுகிறது?

பதில் : 1. அரசாங்கத்தின் ஓர் அங்கமாக நீதித்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது.
2. இது நீதியை நிர்வகித்தல், தகராறுகளை தீர்த்தல் சட்டங்களுக்கு விளக்கம் அளித்தல், அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல்.
3. மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலனாகவும் விளங்குகிறது.

2) இந்திய நீதிமன்றங்களின் பல்வேறு படிநிலைகள் யாவை?

பதில் : இந்திய நீதிமன்றங்களின் பல்வேறு படிநிலைகள்
1. துணை நீதிமன்றம்
2. மாவட்ட நீதிமன்றம்
3. உயர்நீதி மன்றம்
4. இந்திய உச்சநீதிமன்றம்

3) சட்டம், நீதித்துறை - வேறுபடுத்துக.

பதில் : **1. சட்டம்:** இது மக்களை ஆள்வதற்கு ஓர் அரசாங்கத்தாலோ (அ) நிறுவனத்தாலோ விதிக்கப்படும் விதிகளின் அமைப்பு ஆகும்.
2. நீதித்துறை: சட்டப்படி ஒரு நாட்டின் பெயரால் நீதியை வழங்குகின்ற நீதிமன்றங்களின் அமைப்பு நீதித்துறை எனப்படுகிறது.

4) மக்கள் நீதிமன்றம் பற்றி குறிப்பு எழுதுக.

பதில் : மக்கள் நீதிமன்றங்கள் (லோக் அதாலத்)
1. விரைவான நீதியை வழங்க லோக் அதாலத் அமைக்கப்பட்டது.
2. இது மக்கள் முன்னிலையில் மக்கள் பேசும் மொழியிலேயே பிரச்சனையை விசாரித்து தீர்வு காண்கிறது.
3. ஒரு ஓய்வுபெற்ற நீதிபதி, ஒரு சமூக பணியாளர், ஒரு வழக்கறிஞர் ஆகிய மூன்று நபர்கள் கொண்ட ஒரு அமர்வு இதற்கு தலைமை வகிக்கும்.
4. வழக்குரைஞர்கள் இல்லாமல் வழக்குகள் முன் வைக்கப்படுகின்றன.
5. இந்த வழக்குகள் பரஸ்பர ஒப்புதல் மூலம் தீர்த்து வைக்கப்படுகின்றன.
6. முதல் லோக் அதாலத் 1982ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் உள்ள ஜுனாகத்தில் நடைபெற்றது.

5) நடமாடும் நீதிமன்றங்களின் நன்மைகள் யாவை?

பதில் : நடமாடும் நீதிமன்றங்களின் நன்மைகள்
1. நடமாடும் நீதிமன்றங்கள் கிராமப்புற மக்களுக்கு இடர்களை தீர்க்கும் ஒன்றாய் இருக்கும்.
2. இது கிராமப்புற மக்களிடையே நீதி அமைப்பு பற்றி அதிக விழிப்புணர்வை உருவாக்கி, அவர்களது செலவைக் குறைத்து அவர்களின் வாழிடங்களிலேயே நீதியை வழங்க வகை செய்கிறது.

6) "இ - நீதிமன்றங்கள்" - குறிப்பு வரைக.

பதில் : (i) இ - நீதிமன்றங்கள் திட்டம் 2005 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி அனைத்து நீதிமன்றங்களும் கணினி மயமாக்கப்படும்.
(ii) நீதித்துறை சேவை மையம் இ - நீதிமன்றத்தின் ஒரு பகுதியாகும். பொதுமக்கள் மற்றும் வழக்குரைஞர்கள் நேரடியாக வழக்கு நிலை மற்றும் அடுத்த விசாரணை தேதிகளை கட்டணமின்றி கேட்டறியலாம்.

7) தேசிய சட்ட சேவைகள் அதிகாரம் என்றால் என்ன?

பதில் : (i) இது 1987 ஆம் ஆண்டு சட்ட சேவைகள் அதிகார சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.
(ii) இது சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு இலவச சட்ட உதவிகள் வழங்குவதோடு பிரச்சனைகளுக்கு இணக்கமான தீர்வுகான லோக் அதாலத்தை ஏற்பாடு செய்கிறது.

தீர்வுகாண லோக் அதாலத்தை ஏற்பாடு செய்கிறது.

8) பொதுநல வழக்கு பற்றிக் கூறுக.

பதில் : (i) இது பொதுநலனைப் பாதுகாப்பதற்காக நீதி மன்றத்தில் தாக்கல் செய்யும் வழக்கு ஆகும். உச்சநீதிமன்றம் இந்த முறையை அறிமுகப்படுத்தியது.
(ii) இது ஒரு நபர், தனது வழக்கு தொடர்பான நீதிமன்றத்தை அணுக அனுமதிக்கிறது.
(iii) அடிப்படை மனித உரிமைகள் மீறல், சமய உரிமைகள், மாசுபாடு மற்றும் சாலைபாதுகாப்பு ஆகியவற்றிற்காக பொது நல வழக்கை எவரும் தாக்கல் செய்யலாம்.
(iv) இது தொடர்பான எழுதப்பட்ட புகார் கடிதம் மூலம் இவ்வழக்கினைப் பதியலாம். பொதுநல வழக்கு என்ற கருத்து இந்திய நீதித்துறைக்கு புதிதான ஒன்றாகும்.

9) மாண்டெஸ்கியூ பற்றி கூறுக.

பதில் : (i) மாண்டெஸ்கியூ ஒரு புகழ்பெற்ற பிரெஞ்சு தத்துவஞானி ஆவார்.
(ii) ஒரு சுதந்திரமான நீதித்துறை என்ற கருத்தை முன்மொழிந்த முதல் அரசியல் தத்துவஞானி இவராவார்.
(iii) சட்டமன்றம், நிர்வாகம் மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று பிரிவுகளாக அரசாங்கம் செயல்பட வேண்டும் என்ற அதிகாரப்பகிர்வு கோட்பாட்டில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார்.

10) மாண்டெஸ்கியூ என்பவர் யார்?

பதில் : 1. ஒரு சுதந்திரமான நீதித்துறை என்ற கருத்தை முன்மொழிந்த முதல் அரசியல் தத்துவஞானி மாண்டெஸ்கியூ ஆவார்.
2. இவர் புகழ்பெற்ற பிரெஞ்சு தத்துவஞானி ஆவார்.
3. சட்டமன்றம், நிர்வாகம் மற்றம் நீதித்துறை ஆகிய மூன்று பிரிவுகளாக அரசாங்கம் செயல்பட வேண்டும் என்ற அதிகாரப்பகிர்வு கோட்பாட்டில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார்.

11) விரைவு நீதிமன்றங்கள் என்றால் என்ன?

பதில் : விரைவு நீதிமன்றங்கள் 2000ஆம் ஆண்டில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் கீழ் நீதிமன்ற வழக்குகளை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கத்திற்காக தோற்றுவிக்கப்பட்டன.

12) தொலைதூர சட்ட முன்னெடுப்பு (Tele Law Initiative) விவரிக்கவும்.

பதில் : **தொலைதூர சட்ட முன்னெடுப்பு (Tele Law Initiative) :** கிராமப்புற மக்களுக்காக சட்ட உதவி மற்றும் சேவைகள் வழங்குவதற்காக சட்டம் மற்றும் நீதி அமைச்சகம், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கூட்டு முயற்சியுடன் இது தொடங்கப்பட்டது. தொழில்நுட்ப இயங்கு தளமான தொலைதூர சட்ட இணைய வழியின் பொதுவான சேவை மையத்தில் (CSC) காணொளிக் கலந்துரையாடல் மூலம் வழக்குரைஞர்களிடமிருந்து மக்கள் சட்ட ஆலோசனைகளைப் பெறலாம்.

13) குடும்ப நீதி மன்றங்களின் பங்கு பற்றி எழுதுக.

பதில் : **குடும்ப நீதிமன்றங்கள் :** குடும்பம் தொடர்பான சட்ட விவகாரங்களை குடும்ப நீதிமன்றம் கையாளுகிறது. இவைகள் உரிமையியல் நீதிமன்றங்கள் ஆகும். குழந்தையின் பாதுகாப்பு, மணமுறிவு, தத்தெடுப்பு, சிறார் பிரச்சனைகள் ஆகிய குடும்பம் தொடர்பான பல்வேறு உரிமைகள், கோரிக்கைகளுக்காக இந்நீதிமன்றங்கள் பயன்படுகின்றன.

14) தேசிய சட்ட சேவைகள் அதிகாரம் (NALSA) என்றால் என்ன?

பதில் : **தேசிய சட்ட சேவைகள் அதிகாரம் (NALSA) :** இது 1987ஆம் ஆண்டு சட்ட சேவைகள் அதிகார சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இது சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு இலவச சட்ட உதவிகள் வழங்குவதோடு பிரச்சனைகளுக்கு இணக்கமான தீர்வு காண லோக் அதாலத்தை ஏற்பாடு செய்கிறது.

15) பொது நலவழக்கு என்பதை விளக்கவும்.

பதில் : **பொது நலவழக்கு (Public Interest Litigation):**
இது பொதுநலனைப் பாதுகாப்பதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் வழக்கு ஆகும். உச்சநீதிமன்றம் இந்த முறையை அறிமுகப்படுத்தியது. இது ஒரு நபர் தனது வழக்கு தொடர்பான நீதிமன்றத்தை அணுக அனுமதிக்கிறது. அடிப்படை மனித உரிமைகள் மீறல், சமய உரிமைகள், மாசுபாடு மற்றும் சாலை பாதுகாப்பு ஆகியவற்றிற்காக பொது நல வழக்கை எவரும் தாக்கல் செய்யலாம். இது தொடர்பான எழுதப்பட்ட புகார் கடிதம் மூலம் இவ்வழக்கினைப் பதியலாம். பொது நல வழக்கு என்ற கருத்து இந்திய நீதித்துறைக்கு புதிதான ஒன்றாகும்.

5 மதிப்பெண் வினாக்கள் — 5 x 5 = 25

16) நீதித்துறையின் பங்கு பற்றி எழுதுக.

பதில் : நீதித்துறையின் செயல்பாட்டினை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1.	தகராறுகளைத் தீர்வு செய்தல்	பின்வருவனவற்றிற்கு இடையே பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான ஒரு இயக்கமுறையை நீதிமன்ற அமைப்பு வழங்குகிறது. குடிமக்கள் குடிமக்கள் மற்றும் அரசாங்கம் இரண்டு மாநில அரசாங்கங்கள் மத்திய, மாநில அரசாங்கங்கள்
2.	நீதிமன்ற மறு ஆய்வு அதிகாரம்	நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை அமைப்பினை மீறுகிறது என நீதித்துறை நம்பும் பட்சத்தில் அச்சட்டத்தினை அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என அறிவிக்கும் அதிகாரம் நீதித்துறைக்கு உள்ளது.
3.	சட்டத்தை நிலைநிறுத்துதல் மற்றும் அடிப்படை உரிமைகளை செயல்படுத்துதல்	ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் தனக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதாய் நம்பும்பட்சத்தில் அவர் உச்சநீதிமன்றத்தையோ அல்லது உயர் நீதிமன்றத்தையோ அணுகலாம்.

17) உரிமையியல் சட்டம், குற்றவியல் சட்டம் - வேறுபடுத்துக.

பதில் :

வ.எண்	உரிமையியல் சட்டம்	குற்றவியல் சட்டம்
1.	இது பணம் சொத்து மற்றும் சமூகம் தொடர்பான பிரச்சனைகளைக் கையாளுகிறது. எ.கா. : நிலம் தொடர்பான பிரச்சினைகள், வாடகை, திருமணம் தொடர்பான பிரச்சினைகள்.	குற்றம் என சட்டம் வரையறுக்கும் நடத்தைகள் அல்லது செயல்களை இது விசாரிக்கிறது. எ.கா. : திருட்டு, கொலை, பெண்களைத் துன்புறுத்துதல் ஆகியன.
2.	உரிமையியல் நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்டவர்களால் ஒரு புகார் தாக்கல் செய்யப்பட வேண்டும்.	இது வழக்கமாக காவல்துறை விசாரணையுடன் முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்வதன் மூலம் தொடங்குகிறது. அதன் பிறகு நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்படுகிறது.
3.	மனுதாரரின் கோரிக்கையின்படி பணம் செலுத்தும்படியான தண்டனைகள் வழங்கப்படுகிறது.	குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் தண்டனை வழங்கப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர் சிறைக்கு அனுப்பப்படுவார்.

18) உச்சநீதிமன்றத்தின் அதிகார வரம்புகளை விவரி.

பதில் : 1. உச்சநீதிமன்றத்தின் அதிகார வரம்புகள்,

i. முதன்மை அதிகார வரம்பு : உச்சநீதி மன்றத்தில் மட்டுமே முதன் முறையாக தொடுக்கப்படும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் பெற்றுள்ளது.

ii. இது மத்திய அரசிற்கும் ஒரு மாநிலம் அல்லது அதற்கு மேம்பட்ட மாநிலங்களுக்கு இடையிலான பிரச்சினைகள், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கிடையிலான பிரச்சினைகள் ஆகியன முதன்மை அதிகார வரம்புக்குள் அடங்கும்.

2. மேல்முறையீட்டு அதிகார வரம்பு :

i. உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை உச்சநீதிமன்றம் பெற்றுள்ளது.

ii. அவ்வாறான வழக்குகள் மேல்முறையீட்டுக்கு தகுதியுள்ளது என உயர்நீதிமன்றத்தால் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

3. ஆலோசனை அதிகார வரம்பு:

குடியரசுத் தலைவரால் குறிப்பிடப்படும் பொது முக்கியத்துவம் வாய்ந்த கேள்வி குறித்து ஆலோசனை வழங்கும் அதிகாரத்தினை உச்ச நீதிமன்றம் பெற்றுள்ளது.

4. நீதிப்பேராணை அதிகார வரம்பு:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சட்டப்பிரிவு 32ன் படி உச்சநீதிமன்றமும் சட்டப்பிரிவு 226ன் படி உயர்நீதிமன்றமும் நீதிப் பேராணைகளை வழங்குகின்றன.

5. ஆவண நீதிமன்றம்:

இது நிதிமன்ற நடவடிக்கைகளின் பதிவுகளை பராமரிக்கிறது மற்றும் அதன் முடிவுகள் கீழ்நீதிமன்றங்களை கட்டுப்படுத்தும்.

6. சிறப்பு அதிகாரங்கள் :

இது கீழ் நீதிமன்றங்களின் செயல்பாட்டை கண்காணிக்கிறது.

19) இந்தியாவில் நீதிமன்றங்களின் அமைப்பு பற்றி விளக்கவும்.

பதில் : இந்திய உச்ச நீதிமன்றம்
இதன் முடிவுகள் அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துகிறது.
உயர்நீதிமன்ற நீதிபதிகளை இடமாற்றம் செய்யலாம்.
எந்தவொரு நீதிமன்றத்தின் வழக்குகளையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும்.
வழக்குகளை ஒரு உயர்நீதிமன்றத்திலிருந்து மற்றொரு உயர்நீதிமன்றத்திற்கு மாற்றலாம்.

⇩

உயர் நீதிமன்றம்
கீழ் நீதிமன்றங்களிலிருந்து வரும் மேல்முறையீடுகளை விசாரித்தல்.
அடிப்படை உரிமைகளை பெறுவதற்காக நீதிப்பேராணைகள் வழங்கும் அதிகாரம்.
மாநிலத்தின் எல்லைக்குள் உள்ள வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம்.
கீழ் நீதிமன்றங்களைக் கண்காணிக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் அதிகாரம்.

⇩

மாவட்ட நீதிமன்றம்
மாவட்ட எல்லைக்குள் எழும் வழக்குகளைக் கையாளுகிறது.
கீழ் நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்பின் மேல்முறையீடுகளை விசாரிக்கிறது.
கடுமையான குற்றவியல் தொடர்பான வழக்குகளை தீர்மானிக்கிறது.

⇩

துணை நீதிமன்றங்கள்
உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை பரிசீலிக்கிறது.

20) சிறு குறிப்புத் தருக.
அ) மாவட்ட நீதிமன்றங்கள்
ஆ) அமர்வு நீதிமன்றங்கள்
இ) பஞ்சாயத்து நீதிமன்றங்கள்
ஈ) வருவாய் நீதிமன்றங்கள்

பதில் : அ) மாவட்ட நீதிமன்றங்கள் :
மாவட்ட அளவில் சிவில் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் மாவட்ட நீதிமன்றங்கள் என்று அழைக்கப்படுகிறது.
ஆ) அமர்வு நீதிமன்றங்கள் :
குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் அமர்வு நீதிமன்றங்கள் என்று அழைக்கப்படுகிறது.
இ) பஞ்சாயத்து நீதிமன்றங்கள் :
கிராம அளவில் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை பஞ்சாயத்து நீதிமன்றங்கள் கையாளுகிறது.
ஈ) வருவாய் நீதிமன்றங்கள் :
வருவாய் நீதிமன்றங்கள் நில ஆவணங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கிறது. இது நில வருவாயை நிர்ணயம் செய்து நில உரிமையாளர்களிடமிருந்து அதனை வசூலிக்கிறது.